**06.11.2025**

**MCOP.No.38/2018**

**எ.ம.சா.2 : ஜெயராமன்**

**<u>2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

1) நான் தாக்கல் செய்த எ.ம.சா.ஆ.1 பாலிசி ஒரு பாக்கேஜ் பாலிசி (A+B) என்றால் சரிதான். மேற்படி பாலிசி வழங்கப்பட்டது நெல் அறுவடை இயந்திரத்திற்கு வழங்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பாலிசி எ.ம.சா.ஆ.1 ஆவணத்தில் சீட்டிங் கெப்பாசிட்டி குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் எனது முதல் விசாரணையில் பாலிசி விதிமுறை மீறல் உள்ளதாக சொல்லி உள்ளேன். அதை எதன் அடிப்படையில் சொல்லி உள்ளேன் என்றால் statuatory obligation அடிப்படையில் விதி மீறியுள்ளது. மேற்படி பாலிசி விதிமுறைகளில் " IMT28 Legal Liability to paid driver and / or conductor and / or cleaner employed in connection with the operation of insured vehicle" என குறிப்பிடப்பட்டுள்ளதன் அடிப்படையில் நான் பாலிசி விதிமுறை மீறல் என்று சொல்கிறேன். மேற்படி விவரத்தை நான் தாக்கல் செய்த எதிருரையில் சொல்லி உள்ளேனா என்றால் குறிப்பிட்டு சொல்லவில்லை. ஆனால் அதில் குறிப்பிட்டுள்ள விவரத்தை எதிருரையில் சொல்லி உள்ளேன். IMT28 என்பது ஓட்டுநர், நடத்துனர் மற்றும் கிளினர் ஆகியோர்களை உள்ளடக்கியது தான் என்றால் வண்டியை பொறுத்து அது மாறுபடும். எ.ம.சா.ஆ.1 ல் IMT28 என்பது ஓட்டுநர், நடத்துனர் மற்றும் கிளினர் ஆகியோர்களை உள்ளடக்கியது என்றும் அது குறிப்பாக ஓட்டுநரை மட்டும் உள்ளடக்கியது அல்ல டிரைவரையோ அல்லது கிளினரையோ அல்லது கண்டக்டரையோ குறிப்பிடும் என்று சொன்னால் வண்டியை யார் இயக்க தேவையானவர் என்பது பொறுத்து அது மாறுபடும்.

2) basic third party premium எவ்வளவு premium தொகை வாங்கி உள்ளோம் என்றால் ரூ.2730/-. மேற்படி premium தொகை டிராக்டருக்கும், டிரைலருக்கு 1238/- premium தொகை வாங்கி உள்ளோம். basic third party premium மோட்டார் வாகன பிரிவு 147(1)(b)(a) படி ஒரு வாகனத்தின் ஓட்டுநருக்கு basic

premium-த்திலேயே அது கவராகிவிடுகிறது என்றால் இல்லை. ஒரு வண்டியின் ஆர்சி புக்கில் சொல்லப்பட்டிருக்கும் சீட்டிங் கெப்பாசிட்டிக்கு மேல் பிரிமியம் வாங்கி இருந்தால் அதிகபடியான நபர் பயணம் செய்யலாம் என்றால் அது தவறு. உரிய பிரிமியம் தொகை செலுத்தப்பட்டிருந்தால் வேலையாள் இழப்பீட்டின் சட்டத்தின்படி வரக்கூடிய நபர்களான டிரைவர், கிளினர் மற்றும் கூலிகள் இவர்கள் வாகனத்தில் பயணம் செய்யலாம் என்றால் வாகனத்தை பொறுத்து அது மாறும். பிரிவு 5 மோட்டார் IMTயை படி proposal form வாங்கி கொண்ட அதன் அடிப்படையில் பாலிசி வழங்குவோம் என்றால் சரிதான்.

3) proposal form அந்த வாகன உரிமையாளர் வாகனத்தில் பயணம் செய்யும் டிரைவர், கிளினர் மற்றும் தனிநபர் காப்பீடு ஆகியோருக்கு எவ்வளவு காப்பீடு வேண்டும் என்று அதன் அடிப்படையில் பிரிமியம் தொகை கணக்கிடப்பட்டு வாங்கப்படும் என்றால் சரிதான். தனிநபர் காப்பீடு விருப்பத்தின் அடிப்படையிலானது. ம.சா.ஆ.12 மற்றும் எ.ம.சா.ஆ.1 ல் எதிர்மனுதாரர் போட்டது ஒரே பாலிசி தானா என்றால் ஒரே பாலிசி தான். எந்த தேதியில் பிரிமியம் வாங்கியதாக சொல்லப்பட்ட தேதி 02.03.2016 (ம.சா.ஆ.12). எ.ம.சா.ஆ.1 ல் பிரிமியம் வாங்கியதாக சொல்லப்பட்ட தேதி 04.03.2016 என சொல்லப்பட்டுள்ளது. மேற்படி வாடிக்கையாளரிடம் பெற்ற தொகைக்கான ரசீது எண் வேறு பாலிசி எண் வழங்கும்போது கொடுக்கப்படும் பிரிமியம் ரசீது எண் வேறு என்று சாட்சி சொல்கிறார். எந்த தேதியில் பாலிசி தொடங்குகிறதோ அந்த தேதியில் தான் proposal form வழங்கப்படும் என்றால் இல்லை. பிரிமியம் வாங்கும் தேதியன்றே பாலிசி தொடங்கிவிடும். நான் நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் எந்த தேதியில் பாலிசி தொடங்குகிறதோ proposal form பெறப்பட்டு பிரிமியம் தொகை பெறப்படும் என்றால் proposal form முன்பாக வாங்கப்படும்.

4) பின்னிட்டு தான் பாலிசி கொடுக்கப்படும். எந்த தேதியில் பாலிசி தொடங்குகிறது என்றால் 02.03.2016ல் எ.ம.சா.ஆ.1 படி பாலிசி தொடங்குகிறது. Date of

declaration என்ற இடத்தில் 04.03.2016 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல ஒரு ஓட்டுநருக்கு தனிநபர் விபத்து காப்பீட்டில் IMT15 குறிப்பிடப்பட வேண்டும் என்றால் தனிநபர் விபத்து காப்பீடு எடுத்திருந்தால் அது குறிப்பிடப்பட வேண்டும். எ.ம.சா.ஆ.1ல் தனிநபர் விபத்து காப்பீட்டிற்காக ரூ.100 வசூலிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்கான IMT15 என எண் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்படவில்லை. ஒரு பாலிசியை பொறுத்த வரைக்கும் பிழைகளோ, விடுபடுதல்களோ, சந்தேகமோ இருக்கும்பட்சத்தில் அதனால் ஏற்படக்ககூடிய இழப்புக்கான பொறுப்புகள் மனுதாரருக்கும் 1,2 எதிர்மனுதாரருக்கும் பாலிசி வழங்கிய 3ம் எதிர்மனுதாரருக்கும் எதிராகவும் தான் தீர்மானிக்கப்பட வேண்டும் என்றால் சரிதான். ஆனால் இந்த பாலிசியில் அது பொருந்தாது.

5) இந்த விபத்தில் இந்த நஷ்டஈடு மனுவை தவிர வேறு எந்த மனுவும் எங்கள் அலுவலகத்தில் நிலுவையில் இல்லை. ஒரு வாகனத்தை பொறுத்த வரைக்கும் வாகனத்தின் உரிமையாளர் 1 தரப்பினராகவும், காப்பீடு தாரர் 2வது தரப்பினராகவும் இவர்களை தவிர மற்ற நபர்கள் 3ம் தரப்பினராகத்தான் கருதப்படுவார்கள் என்று சொன்னால் அது எல்லா சமயங்களில் பொருந்தாது. சட்டபடியான பொறுப்புரிமை உள்ள நபர்கள் மட்டுமே 3ம் தரப்பினர்களாக கருதப்படுவார்கள். மற்ற நபர்கள் அந்த வரம்புக்குள் வரமாட்டார்கள். சட்டப்படியான பொறுப்புரிமைதாரர் யாரை குறிப்பிடுகிறேன் என்றால் வாகனத்தை பொறுத்து நபர்கள் மாறுபடுவார்கள். Basic premiumதில் வரும் நபர்கள் அனைவரும் statuatory liability என்றும் மற்ற கூடுதல் பிரிமியத்தில் வருபவர்கள் contractual liablity வருபவர்கள் என்றால் சரிதான். எ.ம.சா.ஆ.1ல் நான் போட்டுள்ள பாலிசியில் 4வது பக்கத்தில் உள்ள miscellaneous and agricultural type of vehicle தலைப்பில் வாகன உரிமையாளரிடம் proposal பெறப்பட்டு அதன் அடிப்படையில் வாகன உரிமையாளரிடம் பிரிமியம் பெறப்பட்டு அதன் அடிப்படையில் ஏற்படும் ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஏதேனும் இழப்பு ஏற்பட்டால் ஏற்படும் இழப்பீடுகளுக்கு இன்சூரன்ஸ் நிறுவனம்

பொறுப்பாவார்கள் என்றால் சரிதான்.

6) இந்த நெல் அறுவடை இயந்திரம் ஒரு ஓட்டுநரே கிளினர் வேலை செய்ய முடியாது என்றால் எனக்கு தெரியாது. நான் ஒரு தேசியமயமாக்கப்பட்ட இன்சூரன்ஸ் நிறுவனத்தில் இருந்து கொண்டு தெரிந்த விசயத்தை தெரியாது என்று சொல்கிறேன் என்று சொன்னால் அதைப்பற்றிய விவரம் எனக்கு தெரியாது. இந்த வாகன உரிமையாளர் உரிய proposal form பெற்று பிரிமியம் தொகை செலுத்தியதை பெற்று கொண்டு நாங்கள் தவறான பாலிசி நபர்களுக்கு வழங்கியுள்ளோம் என்றால் சரியல்ல. எங்கள் பாலிசியிலேயே 1,2 எதிர்மனுதாரர்களுக்காக 3ம் எதிர்மனுதாரர் மேற்படி விபத்திற்கு நஷ்ட ஈடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. ஓட்டுநருக்கு மட்டும் தான் அது பொருந்தும். proposal form எனக்கு எதிராக உள்ளதால் அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

**2ம் எதிர்மனுதாரர் 1ம் எதிர்மனுதாரர் குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்.**

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2025.11.06 17:35:47 +0530

**Accidents Claim Tribunal,
Attur.**